பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு தை மீ 14 உ ஞாயிற்றுக்கிழமை (27-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 61

# இனப்பிரச்சினை மத்தியஸ்தம்; ஐந்து வெளிநாடுகள் விருப்பம்

## ஆனால் அரசுக்கு அக்கறையில்லை

யாழ்ப்பாணம், ஜனவரி 27

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, மத்தியஸ்தம் வகிப்பதற்கு, நோர்வே, சுவீடன், நெதர்லாந்து, நியுசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய ஐந்து நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

அவை தங்கள் விருப்பத்தை, இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தி உள்ளன. ஆனால் அரசு அது குறித்து அக்கறையில்லாது இருக்கிறது.

சிறுபான்மைபோர் உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் (M. R. G) உறுப்பினரும், சுவீடிஷ் உப்சால் பல்கலைக்கழகப் பேராசிரியருமான பீற்றர் ஷோல்க் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் பேராசிரியர் ஷோல்க், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் வெளிநாட்டு அரசுகளும் மற்றும் அமைப்புகளும் எடுத்து வரும் முயற்சிகள் குறித்து விவரித்தார்.

அந்த முயற்சிகள் குறித்து இலங்கை அரசின் நிலைப்பாட்டை அறியுமுகமாக, அரச அதிகாரிகளுடன் தாம் பேச்சுக்கள் நடத்தியதாகவும்—

அப்போதே அரசாங்கத்தின் அக்கறை இல்லாமையைத் தாம் புரிந்துகொண்டதாகவும் — அவர் சொன்னார்.

பேராசிரியர் இதுசம்பந்தமாக உதயனுக்கு மேலும் தெரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 1 லட்சம் தொண்டர்கள் தமிழகத்தில் கைது?

சென்னை, ஜன. 27

தமிழ்நாடு மாநில அரசைக் கலைக்கக் கோரி தமிழகத்தில் நாளை நடைபெறவுள்ள வீதி மறியல் இயக்கம் தொடர்பாக பொலீஸார் அ.தி.மு.க. மற்றும் இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த 14 ஆயிரம் பேரை கைது செய்துள்ளனர்.

சென்னை பொலீஸ் ஆணையாளர் பிதுரை இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

ஆனால் ஒரு லட்சம் கட்சித் தொண்டர்கள் கைதாகியிருப்பதாக அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் குற்றஞ் சுமத்தினர்.

கைது செய்யப்பட்டவர்களில் இந்திரா காங்கிரஸ் எம்.பி. அன்பரசு, அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம்.பி. தம்பித்துரை ஆகியோரும் அடங்குவர். (உ-எ)

## ஈழத் தமிழர் சென்ற வாகனத்தின் மீது சூடு!

நேற்று அதிகாலை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் ஈழத் தமிழரை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் இரண்டு வாகனங்கள் மீது பொலீஸார் சுட்டனர்.

பொலீஸார் மறித்த போது அவ்வாகனங்கள் நிற்காமல் சென்றன என்றும் அதனைத் தொடர்ந்து அவற்றின் மீது பொலீஸார் சுட்டனர் என்றும் கூறப்பட்டது.

இதனையடுத்து வாகனங்களை நிறுத்தி விட்டு இருளில் மறைந்ததாகக் கூறப்படும் சில ஈழத்தமிழரை பின்னர் பொலீஸார் கிராமம் ஒன்றில் வைத்துக் கைது செய்தனர். அவர்களில் இருவர் பெண்கள்.

அவர்களிடம் இருந்து மூவாயிரம் லீற்றர் டீசல், பெற்றோல் ஆகியவற்றையும் பொலீஸார் கைப்பற்றினர். (உ-எ)

## ரகசியங்களை காமினி வெளியிடுவாராம்!

கொழும்பு, ஜன. 27

1977 முதல் 1988 வரை ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கீழ் இடம்பெற்ற அரசியல் சம்பவங்கள் பற்றி நூல் ஒன்றை எழுதப்போவதாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா அறிவித்திருக்கிறார்.

''அந்த நூலில் 1977 இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. அரசு, பொதுத் தேர்தலில் அளித்த வாக்குறுதிக்கு இணங்க இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வட்டமேசை மாநாட்டை ஏன் கூட்டவில்லை என்பதை நான் வெளியிடவிருக்கின்றேன்.''—இப்படி திரு காமினி திஸநாயக்கா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

''வட்டமேசை மாநாட்டைக் கூட்டாத காரணத்தை இப்போது நான் சபையில் வெளியிட முடியாது. ஆனால் அக்காரணத்தை எனது நூலில் தெரிவிக்கத்தான் போகின்றேன். காரணத்தை வெளியிடுவதற்கு இன்னமும் காலம் உள்ளது''— என்றும் திரு. திஸநாயக்கா சொன்னார்.

## நாயாறில் விமான தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 27

மணல் ஆறு பகுதியிலுள்ள நாயாறு, செம்மலை மீனவ கிராமங்கள் மீது நேற்று முன்தினம் நண்பகல் 11 மணியளவில் நான்கு பொம்மர்கள் கடும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் அக்கிராமங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிய வந்தது. (உ)

## வவுனியாவில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 27

நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் வவுனியா செக்கடிப்புலவு என்ற இடத்தில் இராணுவத்தினர் தமது காவல் அரணிலிருந்து விடுதலைப் புலிகளின் காவல் அரணை நோக்கி முன்னேற முயன்றபோது அப்பகுதியில் கடும் சண்டை இடம்பெற்றது.

நீண்ட நேரம் இடம்பெற்ற சண்டையை அடுத்து படையினர் பின்வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## முச்சந்தி முரளி



உரிந்த இரகசியங்களிலை உவர் உத்தமரைப் பற்றி ...

## வவுனியாவில் பரவலாக விமானக் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஜன. 27

நேற்று முன்தினம் வவுனியாவில் பரவலாக பல இடங்களில் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

காலை 8 மணிக்கு வேப்பங்குளம் பகுதியில் 2 பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசின. இதனால் அரிசி ஆலை ஒன்று சேதமுற்றது. அதில் வேலை செய்துகொண்டிருந்த சின்னத்தம்பி பழனிச்சாமி (வயது 62) என்ற வயோதிபர் காயமுற்றார்.

மன்னார் வீதியில் உள்ள மற்றொரு அரிசி ஆலை ஒன்றின் மீது வீசப்பட்ட இரண்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அளவெட்டியில் நேற்று வயோதிப மாது பலி!

யாழ்ப்பாணம், ஜன. 27

அளவெட்டி வடக்கு கூட்டுறவாளர் வீதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகாமையில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் குரும்பசிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து அங்கு தங்கியிருந்த 55 வயதுப் பெண் தலை சிதறி அந்த இடத்திலேயே பலியானார். வீடுகள், கடைகள் மற்றும் ஓர் ஆச்சிரமம் ஆகியவை சேதமடைந்தன.

இரண்டு பொம்மர்கள் வட்டமிட்டு 4 குண்டுகளை அந்தப் பகுதியில் வீசின.

இந்தச் சம்பவத்தில் குரும்பசிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து அங்கு தங்கியிருந்த இரத்தினம் இளையதம்பி என்ற ஐந்து பிள்ளைகளின் தாயார் பலியானார்.

அந்தப் பகுதியில் 5 வீடுகள், மூன்று கடைகள், மில் ஆகியனவும் சேதமடைந்தன. (உ-3-5-15)

## நகரசுத்திகரிப்பு வேலை நேற்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 27

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட யாழ் நகரப் புறப் பகுதிகளை சுத்திகரிக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின.

சிரமதான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு வேலைகளில் பாடசாலை மாணவர்கள், மாநகர சபை ஊழியர்கள் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்த தொண்டர்கள் ஆகியோர் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

சிரமதான வேலைகள் நேற்று குருநகர்ப் பகுதியிலும், பஸ் நிலையப் பகுதியிலும் நடைபெற்றன.

பல இடங்களிலும் கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியும் வீதிகளைச் சீராக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. (உ-6)

## பதுக்கிய பொருள்கள் மீண்டும் சந்தைக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 27

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்கள் மீண்டும் வெளியே தலைகாட்டத் தொடங்கிவிட்டன.

மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், அரிசி, சவர்க்காரம் போன்ற பொருள்கள் தற்சமயம் கட்டுப்பாட்டு விலைக்கு ஓரளவு மக்களுக்குக் கிடைக்கின்றன.

எனினும் ஒரு சில கடைகளில் குறிப்பிட்ட ஒரு பொருள் மட்டும் அதுவும் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டது.

இணுவில், சுன்னாகம், கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளில் மக்கள் முண்டியடித்து, கியூவில் நின்று பொருள்களை வாங்கியதை அவதானிக்க முடிந்தது. (உ-3)

## ஈராக் விமானங்கள் ஈரானில் தரை இறங்கின

லண்டன், ஜன. 27

ஈராக்கின் 7 போர் விமானங்கள் நேற்று ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அவசரமாகத் தரையிறங்கின.

அவற்றில் ஒரு போர் விமானம் பின்னர் தீப்பற்றி எரிந்தது.

ஈரான் அரசு அனுமதி வழங்கிய பின்னரே ஈராக்கிய போர் விமானங்கள் தரை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு மாதம் திரம்பிய இரண்டு ஜர்மன் செப்பேர்ட் இன அல்சேசன் நாய்க்குட்டிகள் (ஆண்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. S. R. போட்டோ, இல 12A, கந்தபுராணவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (15245)

எம்மிடம் பரசுதி விதைகளும், பொன் மகட்டை, ...தாலி, தங்க மின்னல் பிற ...ம், ...லடமிலம் இவைகளும் விற்பனைக்குண்டு. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (15628)

ஓலை, பனைமரம், சிலாகை, வீடு உடைக்கக்கூடிய கிடைக்கு உண்டு. தொடர்பு:- 07, கைலாசபிள்ளையார் வீதி, நல்லூர். (15626)

## சித்ராலயா ஸ்ரூடியோ

தரமான போட்டோ ஸ்ரூடியோ பிரதிகளுக்கும், ... வீடியோ படப்பிடிப்புகளுக்கும் சித்ரா... 351 கோவில் வீதி, நல்லூர், நல்லூர் கோவில் மேல்வீதியில் ... (சி/5681)

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண அந்தர மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15597)

## பரீட்சை வினாத்தாள்

மார்ச் 1991 O/L பரீட்சைக்கு உதவியாக Dec 1990 இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி (ஆங்கிலம், சமூகக்கல்வி சமயம் ...) ... வினாத்தாள் ... விற்பனையாகிறது. மொத்தமாக வாங்குவோர்க்கு விலைக் கழிவு உண்டு. ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக்கொள்ள முடியும். ...கஸ் பிறஸ் இன்ஸ்ரிரியூட், ...பாவைச் சந்தி. (15580)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

Spoken English with Grammar By B Manjula ஆங்கிலம் மொழியை சரளமாகக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு (27 - 1 - 91) விசேட புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. G. C. E (O/L) 90 91 புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன. 21/3 அரசடி வீதி கந்தர்மடம். (15612)

## ஒப் செட் கலண்டர்கள்

கடவுள்படங்கள், குழந்தைகள் படங்கள், சினிமா படங்கள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட மாதக் கலண்டர்கள் விற்பனையாகின்றன. (மீரா வெளியீடுகள்) விபரங்களுக்கு:- பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம் யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (15607)

## ரைப்பிங் சேவை

தமிழ்-ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் ஆங்கில ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றது. Fudo, 39/17 மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக) (சி/5564)

## தேவை

சுவிஸ் ... மைகள் மிக்சர் தயாரிப்பதில் நன்கு அனுபவத் திறமை உள்ளவர்கள் நேரில் வரவும். ஹொட்டல் றொயல், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (15620)

## மணமக்கள் தேவை

யாழ்ப்பாண இந்து சைவ வாய்க்குற்றமற்ற 36 வயது படித்த வர்த்தகருக்கும், 31 வயது ... பெண்ணுக்கும் தேவை. எம்மிடம் மணமக்கள் இருக்கின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (15629)

## தொழிற் கல்வி

STCA - ஸ்தாபிதம் 1977 அரசு ... லண்டன் பிற மன ... அங்கீகரிக்கப்பட்ட ... தட்டெழுத்து, சுருக்கெழுத்து ... முறைகள் கணக்கியல் ஆங்கிலம். 149 சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (15617)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

ஈராண்டுப் பகுதிநேரக் கல்விப் பட்டப்பின் டிப்ளோமா

# கற்கைநெறி 1990/91

பட்டம் பெற்றபின் மூன்றாண்டு கால ஆசிரியர் சேவை அனுபவமுடைய அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 28 2 91 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றாடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்கு பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 21-4 91ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை உங்கள் பாடசாலை அதிபர் ஊடாக, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 28 2 91ஆம் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்,
24-1 91
(சி/5692)

## கல்வி

G C E (O/L) புலமைப் பரிசில் வகுப்புகளுக்குரிய கட்டாய பாடமாகிய கணிதபாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து ஆண்டு 11 வரைக்கும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படும். அறமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (15627)

## G.C.E. (O/L) DEC 90

ஆங்கில வினாத்தாள் பகுதி I-II விற்பனைக்குண்டு. 'சாஸ்ரேர்ஸ்' யாழ வைத்தீஸ்வரா கல்லூரிக்கு முன்பாக யாழ்ப்பாணம். (ஆண்டு ஆறு அனுமதிப் பரீட்சைக்கான முகவனொடி வினாத்தாள் 30-01-91 இல் இருந்து பெறலாம்) (15631)

## கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in Basic Language ஆரம்பம் 31 1 91 10 30 a m (திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்) 27 - 1 - 91 10 30 a m (சனி, ஞாயிறு வகுப்புகள்), Unikco Computer Centre 37, Clock Tower Road, Jaffna. (வெலிங்டன் சந்திக்கு வடக்கே உள்ள கேட்மாடி) (சி/5639)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

முழுநேரக் கல்விப் பட்டப்பின் டிப்ளோமா

கற்கை நெறி

# 1990/91 புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றாண்டு கால ஆசிரியர்சேவை அனுபவமுடைய கனிய ... சாலை ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 28 - 02 - 91 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத்தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 21 - 04 1991 ஆம் திகதி பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை உங்கள் பாடசாலை அதிபர் ஊடாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 28 02 - 91 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்,
24-01-91

# அறிவித்தல்

## காரைநகர் சிவன் கோவில்

(ஈழத்துச் சிதம்பரம்)

நிகழும் பிரமோதூத வருடம் தை மாதம் 21ஆம் திகதி (03-02 1991) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த ஈஸ்வரர் சிவன் இராஜகோபுர கும்பாபிஷேகமும், மகாகும்பாபிஷேகமும் சில தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

து. முருகேசு
ஆ. அம்பலவிமுருகன்
ஆதீனகர்த்தாக்கள்
காரைநகர் சிவன் கோவில்

வே. செல்வநாயகம்
செயலாளர்
காரைநகர் சிவன் கோவில்
திருப்பணிச்சபை. (15616)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# வீதி வேலைப் பொருட்களுக்கான கூறு விலை அறிவித்தல் - 1991

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு வீதி வேலைப் பொருட்களுக்கான கண்டல், கிறசர் சல்லிகள், மண் வகைகள், ஊரி, கிறசர் தூள், மக்கி தேங்காய் மட்டை (பொச்சு) கிடுகு, கண்ணாம்பு ஆகியவற்றிற்கான கூறு விலை விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகிறது.

கூறு விலைகள் யாழ். மாநகராட்சி மன்ற மாநகரப் பொறியிலாளரிடமிருந்து 13 - 02 - 91 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரைக்கு 500/- மீளளிக்கப்படும் பிணைப் பணமாகவும் ரூ 50/- கேள்விப் படிவுக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப் பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். கிடுகு, தேங்காய் மட்டை, கண்ணாம்பு போன்ற பொருட்களுக்கு பிணைப் பணம் செலுத்தத் தேவையில்லை ஒவ்வொரு பொருள் விநியோகத்திற்கும் தனித் தனியாக படிவங்களில் கூறுவிலை குறிக்கப்பட்டு 15 - 02 - 91ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடித உறை இரண்டு முத்திரையிடப்பட்டு "மாநகராட்சி பகுதி வீதி வேலைப் பொருட்களுக்கான கூறு விலை - 1991" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகர அலுவலக மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்புகொள்ளவும்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25 - 01 - 91.

வீ. பி பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
(சி/5690)

# ECALOM

மனோகராச்சந்தி.

O/L(க.பொ.த )(சா/த)புதிய ஆண்டுக்கான

6, 7, 8, 9, 10, 11 வகுப்புக்கள் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம் - 28 - 1 - 91
மாலை - 4 மணி

குறிப்பு:- 90 ஏப்ரல் O/L துரித மீட்டல் வினா விடை வகுப்புக்கள் நடைபெறுகிறது; அனுமதிகளை முன்கூட்டியே பெறவும். (15613)

இதயத்தை விட்டகலா

# ஏழாவது நினைவஞ்சலி

## அமரர் ஐ. செல்வச்சோதி

(முன்னாள் பொலிஸ் சார்ஜன், யாழ்ப்பாணம்)

திதி: 1991 — 01 — 27

அன்புத் தெய்வமே! ஆண்டு ஏழு கழிந்தாலும் ஆறுமோ உங்கள் நினைவு. நீங்கள் பார்வையில் தான் மறைந்தாலும் பாசத்தோடு எம்முடன் இருந்து உங்களுக்கே உரித்தான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொள்கை தவறாது நேர்மை வழியில் எம்மை நடத்தினீர்கள்; உத்தமனே உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.
சுன்னாகம். (15625)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மொரார்ஜி தேசாய்க்கு 'பாரத ரத்னா' விருது

புதுடில்லி, ஜன. 27 முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு இந்திய ஜனாதிபதி நேற்று பாரத ரத்னா விருது வழங்கிக் கௌரவித்தார்.

95 வயதான காந்தியவாதியும் விடுதலைப் போராட்ட வீரருமான திரு. தேசாய் இந்திய அரசில் அமைச்சராக, துணைப்பிரதமராக, இறுதியில் பிரதமராக பணிபுரிந்தவர்.

இசைமேதை டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா உட்பட 23 பேருக்கு பத்ம விபூஷண் விருதும், 83 பேருக்கு பத்மஸ்ரீ விருதும் இந்தியாவின் 42 ஆவது குடியரசு தினத்தை ஒட்டி வழங்கப்பட்டன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகம்மா நல்லதம்பி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். கந்தர்மடம் ஆதிகோவிலடி வீதியில் வசித்தவருமாகிய திருமதி நாகம்மா நல்லதம்பி (முன்னாள் ஆசிரியை, யாழ். சன்மார்க்க வித்தியாலயம்) 21-01-1991 இல் கொழும்பில் காலமானார்.

இவர் வி. வ. நல்லதம்பியின் (முன்னாள் அதிபர், புங்குடுதீவு மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும், கணேசகுமார், ஜீவகுமார், நந்தகுமார், ஜெயகுமாரி தில்லைவிநாயகலிங்கம், சிவகுமாரி சிவகுமார், உருத்திரகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தருமலெட்சுமி சதாசிவத்தின் (முன்னாள் ஆசிரியை) அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (27-01-1991) பிற்பகல் 2 மணிக்கு பொறளை டிறேமன்னில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவன், பிள்ளைகள்

(சி/5697)

## வேலுப்பிள்ளை பாலசுந்தரம்

(கிராமசேவையாளர், பலாலி வடமேற்கு -தெல்லிப்பழை A.G.A பிரிவு)

கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தையிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான வேலுப்பிள்ளை பாலசுந்தரம் 26-01-91 சனிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் பத்மாவதி (தெல்லிப்பழை, அரசினர் வைத்தியசாலை) யின் அன்புக் கணவரும், பாலாம்பிகை, பாலரஞ்சனி, பாலராஜினி, பாலரஞ்சன், பாலமனோகரி, பத்மலோஜினி, பாலராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், வ. வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற தெய்வானை அவர்களின் அன்பு மகனும், அருளம்மா, முத்துலிங்கம், பரமலிங்கம், அரியமலர், தவமலர், துரைசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 27-01-91 பிற்பகல் பருத்தித்துறை மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பாலரஞ்சன் (மகன்)

ஐயனார் கலட்டி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(15632)

## தம்பிப்பிள்ளை கந்தையா

(Retired Electrical Foreman)

தம்பிப்பிள்ளை கந்தையா அவர்கள் 26-1-91 அன்று காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரதிதேவி, நாகேஸ்வரி, சண்முகநாதன், கதிர்காமநாதன் (உரிமையாளர் "கோப்பாய் ரெக்ஸ்") ஆகியோரின் தந்தையாரும், சதானந்தன், பகவதி (கனடா), புனிதவதி ஆகியோரின் மாமனாரும், சுபேதரன், கிருத்திகா ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 27-1-91 காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
K. கதிர்காமநாதன்

கிளுவானை லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(15633)

## மனுவேற்பிள்ளை சில்வெஸ்டர்

(நீர்ப்பாசன பொறியியலாளர், திருகோணமலை)

சரம்பனை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை சில்வெஸ்டர் அவர்கள் 23-01-1991 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - செல்லம் தம்பதிகளின் மகனும், 'இமாக்குலேற்'றின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாமினி, இவ்லின், ரோனி (லண்டன்), சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், றெஜினா (அழகு), டெனிஸ், சந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 27-01-1991 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றெஜினா
(சகோதரி)

சரம்பன்.
(15635)

## வவுனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகளினால் ஆலை சேதமடைந்தது.

காலை 9.30 மணிக்கு சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் பொம்மர்கள் வீசிய நான்கு குண்டுகளினால் ஆறு வீடுகளும், ஒரு டிராக்டரும், அரிசி ஆலை ஒன்றும் சேதமுற்றன. ஐந்து பரல் மண்ணெண்ணை குண்டுகள் பட்டு வீணானது.

காலை 10 மணிக்கு பெரிய கட்டு என்ற இடத்தில் வீசப்பட்ட குண்டுகளினால் ஒரு வீடு சேதமுற்றது. அருகில் இருந்த பட்டியில் நின்ற சுமார் முப்பது ஆடுகளில் சில இறந்துள்ளன. ஏனையவை படுகாயத்துக்கு இலக்காகின.

குளுமாட்டுச் சந்தி, பட்டாணிச்சி, புளியங்குளம், குருமண்காடு ஆகிய இடங்களிலும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. (உ)

## ஈராக் விமானங்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கியதாக ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபை அறிவித்தது.

ஈராக்கிய விமானங்கள் ஈரானில் தரையிறங்கியதைத் தொடர்ந்து வளைகுடாப் போரில் திருப்பம் ஏற்படும் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

எனினும் போரில் எந்தப் பக்கத்துடனும் சேராமல் நடுவு நிலைமை வகிக்கும் என்று ஈரானியத் தலைவர் ரஸ்வன் ஜானி நேற்றிரவு தெரிவித்தார். [அ-எ]

## இனப் பிரச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்ததாவது:—

சிறுபான்மையோர் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் அமைப்பான எம். ஆர். ஜியின் உறுப்பினராக நான் செயற்பட்டு வருகிறேன்.

உலகின் 35க்கு மேற்பட்ட நாடுகளில் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் எமது அமைப்பு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

அந்த வரிசையில் இலங்கைத் தமிழர் நிலைகுறித்தும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுக்கள் நடாத்தி மத்தியஸ்தம் வகிக்க சுவீடன், நோர்வே, நெதர்லாந்து, நியுசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன. அவை தமது விருப்பத்தை இலங்கை அரசுக்கும் தெரிவித்துள்ளன.

பிரஸ்தாப நாடுகளில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புக்கள் விளக்கியதன் பயனாகவும் —

லண்டனில் உள்ள கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த இரு எம். பிக்கள் மேற்கொண்ட பிரசாரத்தின் பயனாகவும் —

மேற்சொன்ன நாடுகள் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தன.

வெளிநாட்டு அரசாங்கங்கள் மட்டுமன்றி, சர்வதேச மனிதஉரிமை அமைப்புகளும், தொண்டர் ஸ்தாபனங்களும் இனப் பிரச்சினையைத் தீர்க்குமாறு கொழும்பு அரசை வற்புறுத்தி வருகின்றன.

ஆனால் இலங்கை அரசு இது விஷயத்தில் அக்கறையில்லாது இருக்கிறது. கொழும்பில அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதனை அறிய முடிந்தது.

தமிழ்ப் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்து லண்டனில் உள்ள தமிழ்க் குழுக்களின் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளேன். இங்கும் அந்த அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடாத்த உத்தேசித்துள்ளேன். முக்கிய முடிவுகள் சம்பந்தமாக அவர்களுடன் பேச விரும்பியுள்ளேன் என்று பேராசிரியர் ஷோல்க் தெரிவித்தார். [அ-5]

# வல்வைச் சேதங்களை பார்வையிட்ட பிரதிநிதி!

யாழ்ப்பாணம், ஜன. 27 யாழ்ப்பாணம் வந்திருந்த—நோர்வேயைச் சேர்ந்த—'போரூட்' நிறுவனப் பிரதிநிதி திரு. ஹென்ரிக் போல் ஹீலண்ட் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறைக்கு சென்றார்.

கடந்த வாரம் வல்வெட்டித்துறைப் பகுதி மீது படையினர் நடத்திய விமானத் தாக்குதல் அட்டூழியங்களால் ஏற்பட்ட உயிர், உடைமைச் சேதங்களை அவர் கண்டறிந்தார்.

இந்தப் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக போரூட் நிறுவனம் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அவர் உறுதி தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்ற யாழ். நகரப் பகுதி, காரைநகர் உட்பட பல இடங்களையும் அவர் பார்வையிட்டார்.

இதேசமயம்-செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரும் வல்வெட்டித்துறைக்குச் சென்று சேதங்களைப் பார்வையிட்டனர். (உ-6)

# பாகிஸ்தானுக்கு உதவி; அமெரிக்கா குறைத்தது

வாஷிங்டன், ஜன. 27 பாகிஸ்தானுக்கான இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை அரைவாசியாக அமெரிக்கா குறைத்துள்ளது.

50 கோடி டொலர் உதவியாக வழங்க அமெரிக்க அரசு முன்னர் அறிவித்திருந்தது. இப்போது 20 கோடி டொலர் உதவியையே வழங்க முடியும் என்று அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அறிவித்துவிட்டது. [உ-எ]

# விமான நிலையத்தில் வைத்திய பரிசோதனை

கொழும்பு, ஜன. 27 மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கையர் அனைவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து முதலில் வைத்திய பரிசோதனை செய்யப்படுவர்.

இதற்காக விமான நிலையத்தில் விசேட வைத்திய பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வளைகுடாப் போரில் இரசாயன ஆயுதபாவிப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பதை கண்டுபிடிக்கவே இவ்வைத்திய பரிசோதனை என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## எரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27 கடந்த புதனன்று மூதூர் கட்டைப்பறிச்சான் முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் கடற்கரைச்சேனை பகுதியில் இரு வீடுகளை எரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 27 வவுனியாவில் நேற்றுக் காலை 10 மணியளவில் படையினருடன் இடம்பெற்ற மோதல்சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மேஜர் சௌரி, பாலப்பெருமாள் (ச. அறுதீபன்-வட்டக்கண்டல்) ஆகிய இரு போராளிகளும் வீரமரணம் அடைந்தனர்.

★

மணலாறுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பரமானந்தன் (பத்மநாதன் கிருஷ்ணகுமார் கொழும்புத்துறை) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

★

கடந்த புதனன்று ஆனையிறவில் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த பற்றிக் (கணேசலிங்கம் சின்னராசா-6 ஆம் வட்டாரம் சாம்பல் தீவு, திருமலை) நேற்று வீரமரணமடைந்தார். (உ)

## நகை, பணம் பறிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27 கிளிநொச்சியைச் சேர்ந்த ந. சந்திரகுமார் (வயது 23) என்ற இளைஞர் கடந்த வியாழனன்று வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். அவரைச்சித்திரவதைசெய்தபடையினர் அவரிடமிருந்து சுமார் 30 ஆயிரம் ரூபா பணத்தையும், ஒன்றேகால் பவுண் நகையையும் பறித்தெடுத்துவிட்டு அவரை விடுவித்தனர்.

அதேதினம் ஊரிக்கடையைச் சேர்ந்த யோகநாதன் என்பவரும் வவுனியா நகரில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அதிகாரிகள் விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 27 யாழ். அரச அதிபர் மற்றும் செயலக உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று வேலணைப் பகுதிக்கு நேற்று விஜயம் செய்தது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை அதிகாரிகள் நேரில் கேட்டு அறிந்தனர்.

மேற்படி குழுவினர் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தனர். (அ-6)

# தேயிலை விலை வீழ்ச்சி

வளைகுடாவில் கப்பல் போக்குவரத்து நிச்சயமற்ற நிலையில் இருக்கும் காரணத்தால் கடந்தவாரம் கொழும்பில் இடம்பெற்ற தேயிலை ஏலவிற்பனையில் விலை வெகுவாக வீழ்ச்சி அடைந்தது.

67 லட்சம் கிலோ தேயிலை ஏலவிற்பனைக்கு விடப்பட்டது.

ஒரு கிலோவுக்கு ஐந்து முதல் 25 சதவீதம்வரைவிலைவீழ்ச்சி ஏற்பட்டது.

இந்த விலைக்கும் வாங்க எந்தநாடும் முன்வரவில்லை. இந்நெருக்கடியைத்தவிர்க்க சவூதி அரேபியா குறைந்த விலைக்கு பெருந்தொகையான தேயிலையை வாங்கியது.

இதனால் தேயிலை ஏலவிற்பனை முற்றாக வீழ்ச்சி அடைவது தவிர்க்கப்பட்டது. (உ-எ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-1-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org